**அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கம் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பராயம்

அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1996 இன் 13 ஆம் இலக்க அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கத்தின் கட்டளைச் சட்டத்தின் (283 ஆம் அதிகாரம்) 18 (2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, சங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சங்கத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சங்கத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்

சங்கத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சங்கத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல். நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான்

முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக்கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக்கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சங்கத்தின் கட்டுப்பாட்டுச் சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு கொள்கை இலக்கம் 10 பிரகாரம் ஐயக்கடனிற்காக சாதாரண கடனிற்கான வருடாந்த வட்டி வருமானத்தின் 0.5 சதவீதத்திற்கு சமனான ஒதுக்கமொன்று செய்ய வேண்டிய போதும் மீளாய்வாண்டு இறுதியில் அவ்வாறு ஒதுக்க வேண்டிய ரூபா 333,091 ஆன ஐயக்கடன் ஒதுக்கம் செய்யப்பட்டு இருக்கவில்லை. | விதி 17 இன் ii விதி பிரகாரம், "13 ஆம் மற்றும் 14 ஆம் விதியின் கீழ் வழங்கிய கடனிற்காக ஒவ்வொரு நிதி ஆண்டிலும் அறவிடப்படும் வட்டியிலிருந்து பூச்சியம் தசம் ஐந்திற்கு (0.5%) சமனான தொகையை, மேற்குறித்த கடனாக்கத்தினால் ஏற்பட முடியுமான அறவிட முடியாக் கடனை தீர்த்துக் கொள்ள ஒதுக்கமாக ஏற்படுத்த வேண்டும். குறித்த ஒதுக்கத்தில் இருக்க வேண்டிய நிதி அளவை தீர்மானிக்கும் அதிகாரம் கட்டுப்பாட்டு சபைக்கு உள்ளதாகும்"<br>அதன் பிரகாரம் அந்த ஐயக் கடன் ஒதுக்கத்தை கணக்கிடும் போது 12 | சங்கத்தினால அறிமுகம் செய்துள்ள கணக்கீட்டுக் கொள்கை பிரகாரம் கணக்கு வைக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆம் விதியின் கீழ் வழங்கப்படும் பங்களிப்பு தொகைக்கு வழங்கப்படும் கடனிற்காக கிடைக்கும் வட்டி உள்ளடக்கப்படுவதில்லை. அவ்வாறே ஆண்டினுள் கிடைத்த வட்டியிலிருந்து இந்த ஒதுக்கத்தை ஏற்படுத்த வேண்யடிதால் ஆண்டினுள் உண்மையாக கிடைத்த வட்டி ஊடாக இந்த கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | |
| (ஆ) | சங்கத்தினால் தயாரித்துள்ள அறவிடப்படாத கடன் பதிவேட்டின் பிரகாரம், 05 ஆண்டுகளை விஞ்சி பழமையான 20 கடன்படுனர்கள் இடமிருந்து அறவிட வேண்டிய கடன் ரூபா 5,800,781 ஆனதுடன் அதற்காக ஐயக் கடன் ஏற்பாடு ஒதுக்கி இருக்கவில்லை. | சங்கத்தில் காணப்படும் விதிகள் பிரகாரம் (17 விதியின் ii ஆம் விதி பிரகாரம்) ஐயக்கடன் ஒதுக்கம் மேற்கொண்டுள்ளதுடன் அந்த ஒதுக்கத்தினுள் திரண்ட பெறுமானங்கள் காணப்படுவதால் அறவிட முடியாக் கடனை பதிவழிக்க அந்த ஒதுக்க பெறுமதியை பயன்படுத்த முடியுமாகும். | ஐயக் கடன் ஏற்பாடு ஒதுக்க வேண்டியதாக. |
| (இ) | 2022 திசெம்பர் 31 இல் 288 உறுப்பினர்களிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் தவணை, வட்டி, நிலுவை பங்களிப்புத் தொகை, நிலுவை நிதியம் போன்றவற்றின் கூட்டுத் தொகை ரூபா 23,139,657 கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. எனினும் அவற்றிற்கு இடையில் அறவிட வேண்டிய வட்டி கணக்கிடப்பட்டுள்ளதாக சங்கத்தினால் அறிக்கை இடப்பட்டுள்ள போதும் அந்த அளவை குறிப்பாக காண்பித்திருக்கவில்லை. | 2022 திசெம்பர் 31 இல் 288 உறுப்பினர்களிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் தவணை, வட்டி, நிலுவை பங்களிப்புத் தொகை, நிலுவை நிதியம் போன்றவற்றின் கூட்டுத் தொகை ரூபா 23,139,657 இனுள் உள்ளடங்கும் வட்டி தவிற எஞ்சிய மீதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த கணக்கீடு செய்யப்படாத மீதியை வெவ்வேறாக அறிந்து கொள்ளக்கூடிய வாறு கணனித் தொகுதி மேம்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | காணப்படும் தொகுதியை மேம்படுத்த நடடிக்கை எடுக்க வேண்டியதாக. |
| (ஈ) | கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்ட அட்டவணை பிரகாரம் கொடுப்பனவை புறக்கணித்த திகதி வரை அந்த உறுப்பினரிடமிருந்து அறவிட்டுள்ள அஙகத்துவ தொகையின் கூட்டுத் தொகை மற்றும் கணக்காய்வினால் மேற்கொண்ட கணக்கிடலின் பிரகாரம் அப்பெறுமதிகளை இணக்கஞ் செய்கையில் ரூபா 1,093,150 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | 2021 திசெம்பர் 31 திகதி (ஆரம்ப மீதியில்) கொடுப்பனவை புறக்கணித்துள்ள உறுப்பினர்களின், அங்கத்துவ தொகை மீதியை கணக்கிடும் போதான தவறின் காரணமாக இவ் வித்தியாசம் ஏற்பட்டுள்ளது. சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | சரியான மீதிகளை கணக்கீடு செய்ய வேண்டியதாக. |
| (உ) | அட்டவணை பிரகாரம் கொடுப்பனவை புறக்கணித்த திகதி முதல் மீளாய்வாண்டு இறுதி வரை குறித்த உறுப்பினரிடமிருந்து அறவிட வேண்டிய கடன் தவணைகளின் கூட்டுத் தொகை | 2021 திசெம்பர் 31 திகதி (ஆரம்ப மீதியில்) கொடுப்பனவை புறக்கணித்துள்ள உறுப்பினர்களின், அங்கத்துவ தொகை மீதியை கணக்கிடும் போதான தவறின் காரணமாக இவ் வித்தியாசம் | சரியான மீதிகளை கணக்கீடு செய்ய வேண்டியதாக. |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் கணக்காய்வினால் மேற்கொண்ட கணக்கிடலின் பிரகாரம் அப்பெறுமதிகளிற்கு இடையில் ரூபா 281,827 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | ஏற்பட்டுள்ளது. சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | |
| (ஊ) | சங்க உறுப்பினர்களால் நேரடியாக வங்கிக்கு செலவு வைத்தல்களை கணக்கீடு செய்யும் “வகைப்படுத்தாக பரிமாற்றல் கணக்கு” பெயரிலான தொங்கல் கணக்கொன்றில் 2022 திசெம்பர் 31 திகதியில் தீர்க்கப்படாத ரூபா 3,976,485 ஆன மீதி காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | மேலும் இனங்கண்டு தீர்க்க வேண்டியதாக உள்ள மீதி ரூபா 3,976,485.14 ஆகும். இந்த மீதியையும் தற்போது தீர்க்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக. | மீதிகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டியதாக. |
| (எ) | மீளாய்வாண்டின் இறுதி 04 மாதங்களினுள் சங்கத்தின் வங்கிற்கு செலவு வைக்கப்பட்ட மாற்றுதல்கள் ரூபா 292,063 தொகையை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2022.12.31 திகதியன்று மீதி ரூபா 292,063.59 ஆகும். எனினும் அப்பெறுமதியும் தற்போது தீர்க்கப்பட்ட தொகை ரூபா 222,650.59 ஆனதுடன் மேலும் தீர்க்கப்படவுள்ளது ரூபா 27,413 தொகை மாத்திரமே. அத் தொகையும் பணம் வைப்புச் செய்யும் இயந்திரன் மூலம் (CDM இயந்திரம் மூலம்) வைப்புச் செய்துள்ள தொகை ஆகையால் அவ் வைப்பு தொடர்பாக SMS தகவலொன்றின் மூலம் உறுப்பினர்களை அறிவூட்டி குறித்த வைப்பு தொடர்பாக உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்று இனங்காண நடவடிக்கை எடுக்கப்படுகின்றது | அனைத்து மாற்றல்களையும் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 94,327,940 ஆன இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கொத்த முன்னைய வருடத்தின் இலாபம் ரூபா 64,333,050 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 29,994,890 ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு முதலீட்டு வடடி வருமானம் முன்னைய ஆண்டை விட 218 சதவீதத்தால் அதிகரித்தமை முக்கிய காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆண்டின் போது இணைத்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்களிற்கு இடையில் 26 பேர்கள் அங்கத்துவ கட்டணத்தை | கொடுப்பனவை புறக்கணித்துள்ள உறுப்பினர்களிடமிருந்து பணம் அறவிடுவதற்கு அவர்களுக்கு | அங்கத்தவர் கட்டணம் அறவிட முறையான நடவடிக்கை எடுக்க வேண்டியதாக. |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தியிருக்காததுடன் அவற்றில் 09 அங்கத்தவர்களிடமிருந்து 06 மாதங்கள் மற்றும் 10 அங்கத்தவர்களிடமிருந்து 03 மாதங்களிங்காக அங்கத்துவக் கட்டணத்தை அறவிட சங்கம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தனியாக மற்றும் நிறுவன மட்டத்தில் அறிவூட்டலை தொடர்ந்தும் மேற்கொணடுவருவதுடன் அவ்வாறு மேலும் அறவிடப்படாத கடன் தொகையை அறவிட சட்டரீதியான வழிமுறைக்கு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | |
| (ஆ) | எந்தவொரு குறிப்பான திகதிற்கு ஒவ்வொரு கடன் வகைகளுக்கும் உரியதாக மற்றும் மொத்த நிலுவை கடன் தவணை அளவை மற்றும் வட்டியை வேறுபடுத்தி இனங்காணுவதற்கு முடியுமானவாறு கணனித் தொகுதியை மேம்படுத்திருக்கவில்லை. | கணனித் தொகுதியை மேம்படுத்தும் நடவடிக்கை தற்போது இடம் பெற்றுக்கொண்டு இருப்பதுடன் குறிப்பான திகதிற்கு ஒவ்வொரு கடன் வகைகளுக்கும் உரியதாக மற்றும் மொத்த நிலுவை கடன் தவணை மற்றும் வட்யை வேறுபடுத்தி இனங்காணுவதற்கு முடியுமானவாறு கணனித் தொகுதி தயாரிக்கப்பட்டு வருவதாக. | கணனித் தொகுதியை மேம்படுத்தும் நடவடிக்கை துரிதமாக்கப்பட வேண்டியதாக. |